*கவனிக்க.-2022.12.16 ஆந் திகதிய 2311 ஆம் இலக்க வர்த்தமானியின் பகுதி II (தமிழ் மொழிமூலம்), பகுதி IV(அ) ஆகியவை பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2312 - 2022 දෙසැම්බර් මස 23 වැනි සිකුරාදා - 2022.12.23

*2312 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 23 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 2152 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | 2153 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2023,சனவரி மாதம் 13ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2022, திசெம்பர் மாதம் 30 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு***

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".*

***கங்கானி லியனகே,***
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


2151 - B 082412 - 5,403 (2022/12)

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## சீ சேர்ஞ் பார்ட்னர்ஸ் லங்கா (பிவிரி) எல்ரிடி கம்பனியின் பதிவு இல. - PV 72461

அங்கத்தவர்களின் தன்னிச்சையான ஒடுக்குதல் பற்றிய அறிவித்தல்

இத்தால் சகலரும் அறியத்தருவது யாதெனில், 2022, திசெம்பர் 13 ஆந் திகதி நடைபெற்ற மேற்படி கம்பனியின் அதிவிசேட பொதுக்கூட்டத்தில் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டப் பிரிவு 319(1) (b) இன் கீழ் மேற்படி கம்பனியை அங்கத்தவர்களின் "தன்னிச்சையான ஒடுக்குதல் " மூலம் 2022, திசெம்பர் 13 ஆந் திகதி முதல் கலைப்பதற்கான விசேட தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

கே. எம். ஃபிட்ஸ்டிஜரல்ட் சி.எல்.டி. சில்வா,
பணிப்பாளர்.

2022, திசெம்பர் 15.

12- 508/1

---

## சீ சேர்ஞ் பார்ட்னர்ஸ் லங்கா (பிவிரி) எல்ரிடி கம்பனியின் பதிவு இல. - PV 72461

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்ட பிரிவு 346(1) இன் கீழான கலைப்பாளர் நியமனம் பற்றிய அறிவித்தல்

கொழும்பு -04, காசல் வீதி, இல. 11, 03 ஆம் மாடியில் அலுவலகம் உள்ள ஜெராட் ஜீவானந்தன் டேவிட் ஆகிய நான், இல. 39, கோல் ஃபேர்ஸ் கோர்ட் 2, கொழும்பு 3 இல் உள்ள சீ சேர்ஞ் பார்ட்னர்ஸ் லங்கா (பிவிரி) எல்ரிடி இன் 2022, திசெம்பர் 13 ஆம் திகதி நடைபெற்ற அதிவிசேட பொதுக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி, மேற்படி கம்பனியின் கலைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளேன் என்பதை சகலருக்கும் இத்தால் அறியத்தருகின்றேன்.

ஜெராட் ஜீவானந்தன் டேவிட்,
கலைப்பாளர்.
சீ சேர்ஞ் பார்ட்னர்ஸ் லங்கா (பிவிரி) எல்ரிடி,

Leve 13,
No.11, castle Land,
Colombo 4,
2022, திசெம்பர் 15.

12- 508/2

---

## பகிரங்க அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 8 ஆவது பிரிவு ஏற்பாடுகளுக்கு அமைய, அகிலிட்டி லொஜிஸ்டிக்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் தனது பெயரை அட்வான்டிஸ் ஷிப்ஸ் (பீவீஉ) எல்டீடி என்ற மாற்றிக்கொண்டுள்ளது என்பதை 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவுக்கேற்ப இத்தால் அறிவிக்கின்றோம்.

*முன்னைய கம்பனியின் பெயர்:* அகிலிட்டி லொஜிஸ்டிக்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்

*பதிவிலக்கம்:* PV 4762

*பதிவு செய்யப்பட்ட அலுவலகம்:* இல.400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10

*புதிய கம்பனியின் பெயர்:* அட்வான்டிஸ் ஷிப்ஸ் (பீவீஉ) எல்டீடி

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

ஹேலீஸ் குரூப் சேர்விசஸ் (பிறைவட்) லிமிடட்,
செயலாளர்கள்.

இல.400, டீன்ஸ் வீதி,
கொழும்பு 10,
2022, நவெம்பர் 23.

12- 444

---

## பொது அறிவித்தல்

### 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 242(2) ஆம் பிரிவுக்கு அமைவாக லயன் ப்ரூவரி (சிலோன்) பி.எல்.சி. (PQ57) மற்றும் ஸ்பிரிங்ஸ் (பிரைவட்) லிமிட்டெட் (PV 98633) நிறுவனங்களை ஒன்றிணைத்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ('சட்டம்') 242(3) (பி) பிரிவுக்கு அமைவாக இத்தால் அறிவிக்கப்படுவதாவது,

இச் சட்டத்தின் 242(2) ஆம் பிரிவுக்கு அமைவாக பேர்ள் ஸ்ப்ரிங்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் (PV98633) கம்பனியை லயன் ப்ரூவரி (சிலோன் ) பி.எல்.சி. (PQ 57) கம்பனியுடன் ஒன்றிணைப்பதற்கு லயன் ப்ருவரி (சிலோன் ) பி.எல். சி. (PQ 57) மற்றும் பேர்ள் ஸ்பிரிங்ஸ் (பிரைவேட்) (PV 98633 ) ஆகியவற்றில் நிறைவேற்றப்பட்ட பணிப்பாளர் சபை தீர்மானங்களின் ஊடாக, இவ் இரு கம்பனிகளினதும் பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் தீர்மானித்துள்ளனர்.

ஒன்றிணைக்கப்பட்ட கம்பனி லயன் ப்ருவரி (சிலோன் ) பி.எல். சி. என்பதாக இருக்கும். அத்துடன், இந்த ஒன்றிணைத்தலானது 2023, சனவரி 31 ஆந் திகதி அல்லது கம்பனிகள் பதிவாளரால் தீர்மானிக்கப்படும் ஒரு திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும். சட்டத்தின் 242(4) ஆம் பிரிவின் விதி முறைகளின்

பிரகாரம், ஒன்றிணைப்புக்கு ஒப்புதளிக்கின்ற தீர்மானங்கள் ஒன்றிணைப்புக்கான முன்மொழிவுக்கு சட்டவடிவம் கொடுப்பதாக கருதப்படுகின்றது. அதே வேளை, ஒன்றிணைக்கப்படும் கம்பனியின் பங்குரிமையாளர்கள் அல்லது கடன் வழங்குனர்கள் அல்லது ஒன்றிணைக்கப்படும் ஒரு கம்பனி கடப்பாட்டைக் கொண்டவரான வேறு யாரேனும் நபர் பார்வையிடுவதற்காக மேற்படி தீர்மானங்கள் - இல.61, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 1 என்ற முகவரியில் சாதாரண வணிக நேரங்களில் ( மு.ப. 8.30 தொடக்கம் பி.ப. 4.30 வரை ) வைக்கப்பட்டிருக்கும்.

ஒன்றிணைக்கப்பட்ட கம்பனியான லயன் ப்ரூவரி (சிலோன்) பி.எல்.சி. இன் பதிவு செய்யப்பட்ட முகவரி- இல. 61, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 1 என்பதாகும்.

பணிப்பாளர் சபையின் பணிப்புரைக்கு அமைவாக,

லயன் ப்ரூவரி (சிலோன்) பி.எல்.சி,
கார்சன்ஸ் மெனேஜ்மன்ற் சேர்விசஸ்
(பிரைவேட்) லிமிட்டெட்,
செயலாளர்கள்,

பேர்ள் ஸ்ப்ரிங்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்,
கார்சன்ஸ் மெனேஜ்மன்ற் சேர்விசஸ்
(பிரைவேட்) லிமிட்டெட்,
செயலாளர்கள்,
2022.12.23.

12- 509

### அற்றோணி அதிகாரப் பத்திரத்தை இரத்துச் செய்தல்

பன்னிப்பிட்டிய, மாகும்புர, டீ.டீ.குலதுங்க மாவத்தை, 425/ 1 ஆம் இலக்க முகவரியில் வசிக்கும் ஜயசிங்க ஆரச்சிகே நதீஷா தமயந்தி ( தே.அ.அ.இல. 8074480251V) என்பவரால் ஹோமாகம, பிட்டிபன தெற்கு, 470/ 7 ஆம் இலக்கத்தில் வசிக்கும் ஹபரகட சேனாதீரகே நிரோஷன் புஷ்பகுமார (தே.அ.அ.இல. 842501032V) என்பவருக்கு வழங்கப்பட்ட 2016.09.30ஆந் திகதி அபுதாபி இலங்கை உயர்ஸ்தானிகர் அலுவலகத்தில் கைச்சாத்திடப்பட்ட அற்றோணி அதிகாரப் பத்திரம் இரத்துச் செய்யப்படுவதாக இத்தால் சகலருக்கும் அறியத்தரப்படுகின்றது. இதன் பிறகு அந்த அற்றோணித் தத்துவதாரரால் மேற்படி அற்றோணி அதிகாரப் பத்திரத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் எந்தச் செயற்பாடுகள் தொடர்பிலும் நான் பொறுப்புகூற மாட்டேன் என இத்தால் சகலருக்கும் அறிவித்துக்கொள்கின்றேன்.

ஜயசிங்க ஆரச்சிகே நதீஷா தமயந்தி .

12-575

## ஏல விற்பனைகள்

### இலங்கை வங்கி

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் (397 ஆம் அத்தியாயம்) 22ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்*

கடன் தொடர்பு இலக்கங்கள்: 82196394, 707682201, 76987064, 830004142.

இல.48, கெப்பிட்டிபொல, ஹப்புத்தலை வீதி என்னும் முகவரியைச் சேர்ந்த திரு. ரத்நாயக்க முதியான்சேலாகே அத்துல பண்டார ஈடுவைத்த ஆதனத்தின் விற்பனை.

இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் 19 ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கிப் பணிப்பாளர்கள் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2019.06.14ஆந் திகதி திங்கட்கிழமை 2128ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2019.06.03ஆந் திகதி வியாழக்கிழமை "தினமின", மற்றும் "டெய்லிநியுஸ்"ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச்சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் அறவிட வேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த ஆதனத்தையும் நில மனையையும் இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவ என்னும் முகவரியைச் சேர்ந்த திருவாளர்கள் T&H ஒக்ஷன்ஸ் ஏல நிறுவனத்தின் ஏலதாரர் திரு. துசித்த கருணாரத்ன அவர்கள் 2023.01.24ஆந் திகதி புதன்கிழமை பி.ப.1.30 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

#### அட்டவணை

1."பூபாலவத்த" என யாவரும் அறிந்ததும் அழைக்கப் படுவதுமான காணியின் குறித்த பிரிக்கப்பட்ட காணித்துண்டு ஊவா மாகாணம். பதுளை மாவட்டம், பளுகம கிராம அலுவலர் பிரிவு, இல 50 இல் உடுகிந்த உடபலாத்தகோரளையில் பளுகம கிராமத்தில் அமைந்துள்ள உத்தரவுபெற்ற நில அளவையாளர் P. B. இலங்கசிங்ஹ தயாரித்த 20.04.2007 ஆந் திகதியிட்ட வரைபட இல. BD/6243 இல் துண்டு 01 என விபரித்த காணித்துண்டு மேற்குறிப்பிட்ட வரைபடத்தின்படி - வடக்கு : கந்தே எலயும் பிரதான பாதையும் ; கிழக்கு : எஸ். பீ. ரத்நாயக்க தயாரித்த 17.07.1990 ஆந் திகதியிட்ட வரைபட இல. 106 இல் துண்டு இல. 03 மற்றும் கே. எம். எம். ஜயசேகர உரிமை கோரும் காணியும்; தெற்கு : கே. என். எம். சந்ரசேன உரிமைகோரும் காணியும் ; மேற்கு : எஸ். பீ. ரத்நாயக்க தயாரித்த 17.07.1990ஆந் திகதியிட்ட வரைபட இல. 106 இல் துண்டு இல. 01 உம் எல்லைகளாகக் கொண்டு ஒரு றூட் ஆறு தசம் ஆறு பேர்ச் (0ஏ. 1றூ. 6.6பே.)

விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள சகலதும் ஆகும்.

மேற்குறிப்பிட்ட துண்டு 01 பின்வரும் காணியின் ஒரு மீளவை ஆகும்.

"பூபாலவத்த" என யாவரும் அறிந்ததும் அழைக்கப் படுவதுமான காணியின் குறித்த பிரிக்கப்பட்ட காணித்துண்டு ஊவா மாகாணம், பதுளை மாவட்டம், பளுகம கிராம அலுவலர் பிரிவு, இல. 50 இல் உடுகிந்த உடபலாத்த கோரளையில் பளுகம கிராமத்தில் அமைந்துள்ளதோடு "உத்தரவுபெற்ற நில அளவையாளர் எஸ். பீ. ரத்நாயக்க தயாரித்த 17.07.1990 ஆந் திகதியிட்ட வரைபட இல. 106 இல் துண்டு 02 என விபரித்த காணி மேற்குறிப்பிட்ட வரைபடத்தின்படி - வடக்கு : கந்தே எலயும் பிரதான பாதையும் ; கிழக்கு : துண்டு இல. 03 மற்றும் கே. எம். எம். ஜயசேகர உரிமை கோரும் காணியும் ; தெற்கு : கே. என். எம். சந்ரசேன உரிமைகோரும் காணியும்; மேற்கு : துண்டு இல. 01 உம் எல்லைகளாகக் கொண்டு ஒரு றூட் ஆறு தசம் ஆறு பேர்ச் (0ஏ. 1றூ. 6.6பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள சகலதும் ஆகும். இது பதுளை மாவட்ட காணிப் பதிவகத்தில் N45/80 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

டபிள்யூ. எஸ்.ஜீவானந்த,
முகாமையாளர்.

இலங்கை வங்கி,
வெலிமடைக் கிளை.

12- 582

---

## இலங்கை வங்கி

1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் (397 ஆம் அத்தியாயம்) 22ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்

கடன் தொடர்பு இல.: 83638229.

கொழும்பு -07, பிலவர் வீதி, இல. 61 என்னும் முகவரியைச் சேர்ந்த திரு. எம்.ஏ.எஸ். சாலி என்பவரின் கடன் பொறுப்புக்காக ஈடுவைத்த சேர் ஏர்னஸ்ட் தி சில்வா மாவத்தை, வரிமதிப்பு இல. 61/ A ஐக் கொண்டுட மாடி வீடு, நிலத்தளம், துண்டு 2, அலகு 2 வட்டாரம் இல. 36 இல் அமைந்த ஈடுவைத்த ஆதனத்தின் விற்பனை.

இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் 19 ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கிப் பணிப்பாளர்கள் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2019.06.28ஆந் திகதி 2130ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2019.06.11ஆந் திகதி "தினமின", "தினகரன்" மற்றும் "டெய்லிநியுஸ்", ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச்சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் அறவிட வேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த ஆதனத்தையும் நில மனையையும் இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவ என்னும் முகவரியைச் சேர்ந்த திருவாளர்கள் T&H ஒக்ஷன்ஸ் ஏல நிறுவனத்தின் ஏலதாரர் திரு. துசித்த கருணாரத்ன அவர்கள் 2023.02.10ஆந் திகதி மு.ப.11.00 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

( * 22 ஆம் பிரிவின் கீழான மேற்படி விற்பனை அறிவித்தல் வெளியிடப்பட்டதன் பின்னர், ஏல நடைமுறையைத் தற்காலி கமாக நிறுத்தி வைக்கும் பொருட்டு வாடிக்கையாளர் 3, 063, 648.00 ரூபாவை வைப்பிலிட்டுள்ளார்.)

### முதலாவது அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோறளை பல்லேபற்றுவில் கொழும்பு மா.வ.உ., (DRO) பிரிவில் கொழும்பு மாநகர சபை எல்லைகளுள் கொழும்பு பிரதேச செயலாளர் பிரிவில் மற்றும் கறுவாத்தோட்டம் கிராம அலுவலர் பிரிவு இல. 182 இல் வட்டாரம் இல. 36 இல் அமைந்ததும் உத்தரவுபெற்ற நில அளவையாளர் எம். எஸ். ரீ. பீ. சேனாதீர தயாரித்த 31.01.1995 ஆந் திகதியிட்ட கூட்டாண்மை வரைபட இல. 1917 இல் விபரித்த சேர் எர்னஸ்ட் தி சில்வா மாவத்தை, வரிமதிப்பு இல. 61A ஐக் கொண்ட அலகு இல. 2, துண்டு 2, நிலத்தளம், மாடி வீதி- வடக்கு: இத்துண்டையும் அலகு 1, துண்டு 1 ஐயும் பிரிக்கும் இத்துண்டின் மத்திய வடக்குச் சுவரும்; கிழக்கு : இத்துண்டையும் அலகு 1, துண்டு 1 ஐயும் பிரிக்கும் இத்துண்டின் மத்திய கிழக்குச் சுவரும்; தெற்கு : இத்துண்டையும் சேர் எர்னஸ்ட் தி சில்வா மாவத்தை நிலமனை இல. 65 ஐயும் பிரிக்கும் இத்துண்டின் மத்திய தெற்குச் சுவரும் ; மேற்கு : இத்துண்டையும் அலகு 1, துண்டு 1 ஐயும் பிரிக்கும் இத்துண்டின் மத்திய மேற்குச் சுவரும் ; உச்சி : அலகு 5 துண்டு 5. தளத்தின் மத்தியும் ; கீழ் : இத்துண்டின் தளத்தின் மத்தியும் எல்லைகளாகக் கொண்டு தொளாயிரத்து அறுபது சதுர அடி (960ச.அ.) விஸ்தீரணமுடையது.

இக்கூட்டாண்மை அலகுக்கான பகிரப்படாத பங்கு சதவீதம் கூட்டாண்மை ஆதனத்தின் பொது மூலகங்களில் 01.46% ஆகும். இது கொழும்புக் காணிப் பதிவகத்தில் CONE126/ 40 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

### இரண்டாவது அட்டவணை

பொது மூலகங்கள்

கூட்டாண்மை ஆதனத்தின் சட்டரீதியான பொது மூலகங்கள்

1. அ. கட்டிடம் அமைந்திருக்கும் காணி கால்வாய்கள்

ஆ. அதே காணியின் மீதிப்பாகம்

2. அத்திவாரங்கள், தூண்கள், மர இரும்பு உத்திரங்கள், ஆதாரங்கள், வடிகால், சாக்கடைகள், மேன்ஹோல்கள், ட்ரான்ஸ் போமரிலிருந்து மீற்றர் வரையான மின்கம்பி, பிரதான மீற்றர்கள் வரையான நீர்க்குழாய்கள், மின்தூக்கிகள், படிக்கட்டுகள், தாழ்வாரங்கள், கால்வாய், கொரிடோர்கள், பாதுகாப்பு அறை, தீ அணைக்கும் உபகரணம், மின்பிறப்பாக்கி, நீர்த்தொட்டி, நீர் இறைக்கும் இயந்திரம், மேற்புறத் தொட்டிகள், மொட்டை மாடித்தோட்டம், எல்லைச்சுவர்கள், கூரை மற்றும் அலகு 1 துண்டு 1.

3. ஏனைய அலகுகளில் விபரித்த பகுதிகள் தவிர்ந்த கட்டிடத்தின் ஏனைய எல்லா கட்டமைப்புகள்.

4. 3 தொடக்கம் 39 வரையான அலகுகளின் PL1 - PL37 என அடையாளமிட்டு ஒதுக்கப்பட் வாகனத் தரிப்பிட துண்டுகளை பொதுவாக உபயோகித்தல்.

இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

டபிள்யூ. எம் எச். ஏ. எஸ். எஸ். பீ. ஏக்கநாயக்க,
முகாமையாளர்,
(அறவிடல் மற்றும் கடன் கண்காணிப்பு).

இலங்கை வங்கி,
தலைநகரக் கிளை.

12- 583

---

## இலங்கை வங்கி

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் 2000 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்கச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் (397 ஆம் அத்தியாயம்) 22ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்*

இல.105, 25 ஆவது மைற்கல், பென்டிவெல, ஜயந்திபுர என்னும் முகவரியில் அமைந்துள்ள சஞ்ஜீவ றைஸ் புரடக்ஸ்(தனியார்) நிறுவனத்தினரின் கடன் பொறுப்புகளுக்காக ஈடுவைக்கப்பட்ட பொலன்னறுவை, ஜயந்திபுர எனும் இடத்தில் உள்ள "பென்டிவெவ" எனும் ஆதனத்தின் விற்பனை.

இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் 19 ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கிப் பணிப்பாளர்கள் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2018.07.20ஆந் திகதிய 2018ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2018.07.12ஆந் திகதி வியாழக்கிழமை "டெய்லிநியுஸ்", "தினகரன்"மற்றும்"தினமின" ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச்சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் அறவிட வேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த ஆதனத்தையும் நில மனையையும் இல.6A, பெயார்பீல்ட் கார்டன்ஸ், கொழும்பு 08 என்னும் முகவரியைச் சேர்ந்த திருவாளர்கள் சொக்மன் அன்ட் சமரவிக்ரம ஏல நிறுவனத்தின் ஏலதாரர் 2023.01.17ஆந் திகதி செவ்வாய்கிழமை ந.ப.12.00 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

### முதலாவது அட்டவணை

வடமத்திய மாகாணம், பொலநறுவை மாவட்டம், தமன்கடுவ பிரதேச செயலாளர் பிரிவில் மெதபற்றில் பெந்திவெவ பிரதேசசபை எல்லைகளுள் பெந்திவெவ கிராமத்தில் அமைந்ததும் "பெந்திவெவ" என அழைக்கும் காணியின் உத்தரவுபெற்ற நில அளவையாளர் (பொலநறுவை தயாரித்த) 1995.05.17 ஆந் திகதியிட்ட வரைபட இல. F.D.P. 9 இல் (தாள் இல. 222 , இடைச்செருகு இல. 212) விபரித்த இல. 3716 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு - வடக்கு : துண்டு இல. 3717 உம் ; கிழக்கு : துண்டு இல. 3717; தெற்கு : துண்டு இல. 3717 உம் ; மேற்கு : துண்டு இல. 3717 உம் எல்லைகளாகக் கொண்டு கட்டிடங்களுடன் ("ராஜினி நெல் ஆலை" என அழைக்கப்படும் அரிசி ஆலையும் 2000 கி.கி. கொள்ளளவைக் கொண்ட அசையா கொதிகலன் ஒவ்வொன்றும் 4.5' x 10 x 11x 94 x 80 கொள்ளளவையுடைய 4 தொட்டிகள் வைக்கக்கூடிய 61' X 35' சதிரடிக்கும் கொட்டில்களையும் தளத்துடனும்) ( 0.5980 ஹெக்டயார் விஸ்தீரணத்துடன் இது பொலநறுவை மாவட்ட காணிப்பதிவகத்தில் BO2/140 இல் பதிவுசெய்யப்பட்டது.

### இரண்டாவது அட்டவணை

மேலே முதலாவது அட்டவணையில் விபரித்த காணிக்கும் நிலமனைக்கும் பொருத்திய உதிரிப் பாகங்களுடனான சகல பொருத்துக்களும் இயந்திர சாதனங்களும் ஆகும்.

| *Item* | *Model No.* | *Serial No.* | *Description* | *Make* | *Age (year)* | *No. of units* |
|---|---|---|---|---|---|---|
| 01 | QDLGJ10B | 0254 | Rice Huller | China | 02 | 02 Nos. |
| | QDLGJ10B | 0255 | | | | |
| 02 | TQLZ150 | 009 | Vibrating cleaner | China | 02 | 01 Nos. |
| 03 | TQsx120x2 | 122 | De Stoner | | | |
| | TQsx120x2 | 123 | | | | |
| 04 | MGCZ60x20 x2 | 607 | Paddy Separator | China | 02 | 01 Nos. |
| 05 | MNMLS46 | 0136 | Vertical Whitener | China | 02 | 03 Nos. |
| | MNMLS46 | 0135 | | | | |
| | MNMLS46 | 0137 | | | | |
| 06 | MMJM125 | 015 | Rotary Grader | China | 02 | 02 Nos. |
| | MMJM125 | 014 | | | | |
| 07 | MPGT180E | 0193 | Silky Polisher | China | 02 | 03 Nos. |
| | MPGT180E | 0194 | | | | |
| | MPGT180E | 0195 | | | | |
| 08 | PCleaner01 | | Paddy Cleaner | India | 02 | 01 Nos. |
| 09 | PStockP 01 | | Paddy Stocking Plants | Local | 02 | 01 Nos. |
| 10 | Dryer01 | | Dryer | India | 03 | 01 Nos. |
| 11 | FFF | V8RA464 | Steam Boiler | India | 03 | 01 Nos. |
| 12 | CDryer 01 | | Cooling Dryer | Local | 02 | 01 Nos. |
| 13 | Cycloner 01:09 | | Cyclones | Local | 02 | 09 Nos. |
| 14 | 65 XM-135 | C20120 267 | CCD Rice Color Sorter | China | 02 | 01 Nos. |
| 15 | RColor 01 | | Rice Cooler | Local | 02 | 02 Nos. |
| | RColor 02 | | | | | |
| 16 | RStockT 01:10 | | Rice stock tank | Local | 02 | 10 Nos. |
| 17 | RSticksT01 | | Rice stock tank | Local | 02 | 01 Nos. |
| 18 | RStcs 01 | | Rice stock tank color sotor | Local | 02 | 01 Nos. |
| 19 | RCON01:06 | | Rice conveyor | Local | 02 | 06 Nos. |
| 20 | DCON01 | | Dust conveyor | Local | 02 | 01 Nos. |
| 21 | RBM01 | | Rice band machine | Local | | 01 Nos. |
| 22 | Y2160M-4 | 2199G | Air compressor | China | 02 | 02 Nos. |
| | NW100012 | | IND-MW 15012-250-00 | | | |
| 23 | PSteamT 01:01 2 | | Paddy steam tank | Local | 02 | 12 Nos. |
| 24 | PCon 01 | | Paddy conveyor | Local | 02 | 01 Nos. |
| 25 | PStockT01 | | Paddy stock tank | Local | 02 | 01 Nos. |
| 26 | PCooler T01 | | Paddy Cooler | Local | 02 | 02 Nos. |
| 27 | WPStock T01 | | Wastepaddy stock tank | Local | 02 | 01 Nos. |
| 28 | SBF&AT01 | | Steam boiler filter & ash tank | Local | 02 | 01 Nos. |
| 29 | E01:022 | | Elevator 32ft | Local | 02 | 22 Nos. |

*பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,*

*டி.கே.எஸ். என். குணவர்தன,*
*பிரதான முகாமையாளர்,*
*(அறவிடல்- நிறுவனம்).*

*இலங்கை வங்கி,*
*நிறுவன அறவிடல் பிரிவு,*
*இலங்கை வங்கி சதுக்கம்,*
*இல.01, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு -01.*

*12- 584*

**இலங்கை வங்கி**

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் (397 ஆம் அத்தியாயம்) 22ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்*

*இல.105, 25 ஆவது மைற்கல், பென்டிவெல, ஜயந்திபுர, பொலன்னறுவை என்னும் முவரியில் அமைந்துள்ள சஞ்ஜீவ றைஸ் புரடக்ஸ்(தனியார்) நிறுவனத்தினரின் கடன் பொறுப்புகளுக்காக ஆதனத்தின் விற்பனை.*

*இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் 19 ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கிப் பணிப்பாளர்கள் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2018.07.20ஆந் திகதிய 2081ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2018.07.12ஆந் திகதி வியாழக்கிழமை ' "டெய்லிநியுஸ்", "தினகரன்"மற்றும் "தினமின" ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச்சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் அறவிட வேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த ஆதனத்தையும் நில மனையையும் இல.6A, பெயார்பீல்ட் கார்டன்ஸ், கொழும்பு 08 என்னும் முகவரியைச் சேர்ந்த திருவாளர்கள் சொக்மன் அன்ட் சமரவிக்ரம ஏல நிறுவனத்தின் ஏலதாரர் 2023.01.17ஆந் திகதி செவ்வாய்கிழமை மு.ப.11.00 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

***முதலாவது அட்டவணை***

*வடமத்திய மாகாணம், பொலநறுவை மாவட்டம், மெதபற்றுவவில் தமன்கடுவ பிரதேச செயலாளர் பிரிவில் பென்டிவெவ 153 ஆம் இலக்க கிராம அலுவலர் பிரிவில் பென்டிவெவெ கிராமத்தில் அமைந்ததும் குடியிருப்புகள் (கொலனி) அலுவலர் தயாரித்த பென்டிவெவ க. கැ සැ இல் விவரித்த துண்டு 108C என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு - வடக்கு : துண்டுகள் 105, 104 உம்; கிழக்கு : F.T.P. 9/2975 உம்; தெற்கு : பாதைக்கு ஒதுக்கப்பட்டதும்; மேற்கு : துண்டு 108B மற்றும் பாதை ஒதுக்கமும் அளவையாளர் நாயகம் தயாரித்ததும் உத்தரவு பெற்ற நில அளவையாளர் விமல் ராஜரத்ன 2001.06.21 இல் விபரித்த வரைபட இல. 1118 இல் துண்டு 1 என அளந்து காட்டப்பட்ட அதே காணியும் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபட இல. 1118 இன் படி மூன்று றூட் இருபத்து நான்கு பேர்ச்சுகள் (0ஏ. 3றூ. 24பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள சகலதும் ஆகும். இது பொலநறுவை மாவட்ட காணிப்பதிவத்தில் L.D.O./B/23/17 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.*

*காணியை வங்கிக்கு ஈடுவைப்பதற்கு தமன்கடுவ பிரதேச செயலாளர் தனது தொடர்பு இல. එන්සීපී/ටීකේ/9/2/153/105 இன் கீழ் 20.11.2015 ஆந் திகதியிட்ட கடிதம் மூலம் முன் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.*

***இரண்டாவது அட்டவணை***

**ஒதுக்கங்கள்:**

*01. வைத்திருப்பவையின் பேரில் அல்லது கனிப்பொருள்கள் எல்லாவற்றுக்கும் (இவ் வழங்கலில் பெறுமதி வாய்ந்த கற்கள் உட்பட) உரிமையும் எவையேனும் அத்தகைய கனிப்பொருள்களை அகற்றுவதற்கோ தேடி எடுப்பதற்கோ வேலை செய்வதற்கோ அகழ்வதற்கோ வைத்திருக்கும் உரிமை அரசாங்கத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.*

*02. இவ் வழங்கல் திகதியில் தற்சமயம் வைத்திருப்பவை மீதான வழி உரிமை அல்லது ஏனைய பணிகளுக்கு சொந்தக்காரருக்கான உரித்து உரிமை.*

**நிபந்தனைகள்:**

*01. உரிமையாளர் குறித்த உப பிரிவின் விஸ்தீரணத்தில் 1/4ஏக்கர் மேட்டுநிலம் 1 1/2 ஏக்கர்கள் நீர்ப்பாசனக் காணி அலகு அல்லாது காணப்படும் பிரிக்கப்பட்டதொரு பாகத்தை விற்பனை செய்யலாகாது.*

*02. இங்கு குறித்த ஆகக்குறைந்த பகுதி 1/3 ஏக்கர்கள் தவிர்ந்த வைத்திருக்கும் பிரிக்கப்படாத பங்கை உரிமையாளர் விற்பனை செய்யலாகாது.*

*03. நிபந்தனை 1 இல் குறிப்பிட்ட உப பிரிவின் அலகு தவிர்ந்த விஸ்தீரணத்தில் வைத்திருக்கும் பிரிக்கப்பட்ட குறைந்த பாகத்துக்கு எந்தவொரு நபரும் உரிமையாளராக முடியாது.*

*04. நிபந்தனை 2 இல் குறிப்பிட்ட ஆகக்குறைந்த பகுதி தவிர்ந்த வைத்திருப்பவைகளின் பிரிக்கப்படாத பங்குக்கு ஒருவரும் உரிமையாளராக முடியாது.*

*05. வைத்திருப்பவை அல்லது நீர்ப்பாசன வசதியளிக்கக் கூடிய எவையேனும் பகுதி அல்லது இதன் பின்பு நீர்ப்பாசன கட்டளைச்சட்டத்தின் முன் ஏற்பாடுகளின் (அத்தியாயம் 453) கீழ் மற்றும் அதன் கீழான எவையேனும் வீதிகளுடன் நீர்ப்பாசன பிரதேசம் தொடர்பில் நிர்மாண வேலையில் ஏற்கனவே நிர்மாணிக்கப்பட்ட எவையேனும் நீர்ப்பாசன வேலை அல்லது இதன் பின்பு நிர்மாணிக்கப்படுபவை தொடர்பில் உரிமையாளர் இணங்க வேண்டும்.*

*06. அரசாங்க அதிபர் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகார சபையிடமிருந்து எழுத்தில் அனுமதி பெற்றால் அன்றி எந்தவொரு கனிப்பொருளை தேடவோ, அகழ்வதற்கோ, அல்லது காணியை விற்பதற்கோ உரிமையாளருக்கு முடியாது*

07. பிரதேச செயலாளரின் எழுத்து மூலமான முன் அனுமதி இன்றி இதன் எந்தவொரு பகுதியையும் வைத்திருக்க ஏற்பாடு இல்லை.

**முன்றாவது அட்டவணை**

மேலே முதலாவது அட்டவணையில் விபரித்த நிலமனைக்கும் காணிக்கும் பொருத்தப்பட்ட சாதனங்களுடன் பின்வரும் பொருத்துகளும் இயந்திர சாதனங்களும் அடங்கும்.

| Item | Description | country | Unit |
|---|---|---|---|
| 01 | Steam boiler (Veesons) | India | 01 |
| 02 | Color Separator 4 Tons | China | 01 |
| 03 | Color Separator 3.5 Tons | India | 01 |
| 04 | Dryer 23000 Kg | India | 01 |
| 05 | Dryer 18000 Kg | India | 01 |
| 06 | Compressor (ELGI) | India | 01 |
| 07 | Silky Polisher 3.5 Tons | India | 01 |
| 08 | Silky Polisher 2.0 Tons | India | 01 |
| 09 | Weigh Bride 30 Tons | UK | 01 |
| 10 | Paddy cleaner | Local | 04 |
| 11 | De Stoner | Local | 05 |
| 12 | Double Polisher | China | 01 |
| 13 | Paddy Huller | Local | 02 |
| 14 | Jet Polisher | China | 01 |
| 15 | Suction Fan | Local | 07 |
| 16 | Rice Cooler | Local | 03 |
| 17 | Dust Separator | Local | 02 |
| 18 | Elevator 30ft | Local | 01 |
| 19 | Elevator 28ft | Local | 01 |
| 20 | Elevator 24ft | Local | 03 |
| 21 | Elevator 22ft | Local | 12 |
| 22 | Elevator 18ft | Local | 18 |
| 23 | Elevator 16ft | Local | 01 |

இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபை கட்டளைப்படி,

டி.கே.எஸ். என். குணவர்தன,
பிரதான முகாமையாளர்,
( அறவிடல்- நிறுவனம்).

இலங்கை வங்கி,
நிறுவன அறவிடற் பிரிவு,
3 ஆம் தளம், "BOC சதுக்கம்",
இல.1, இலங்கை வங்கி மாவத்தை,
கொழும்பு -01.

12- 585

**சம்பத் வங்கி பீஎல்சீ**

(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்*

1. ஏ.ஏ.கே. லிவேரா மற்றும் ஏ.ரீ. எஸ். எம். லிவேரா .
கணக்கு இல. : 1006 5414 8808.
2. ஏ.ஏ.கே. லிவேரா.
கணக்கு இல.: 0006 5005 7274/0006 5002 2300
3. திலின டயர் சார்விஸ்.
கணக்கு இல.: 0006 1000 7465.

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2020.07.30ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2022.02.11ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் (Gazette) 2022.01.31ஆந் திகதிய "திவயின" (Divaina), "ஜலண்ட்" (Island), "தினக்குரல்" (Thinakkural) ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான நான்கு கோடியே நாற்பத்தி நான்கு இலட்சத்து நாற்பத்தி நான்காயிரத்து ஐந்நூற்று எழுபத்தி ஆறு ரூபா ஐம்பத்தி ஐந்து சதம் (ரூபா 4,44,44,576.55) 2020, யூலை 02 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை இரண்டு கோடியே ஐம்பத்தி மூன்று இலட்சத்து பதினைந்தாயிரத்து இருநூற்று இருபத்தி நான்கு ரூபா எழுபத்தி இரண்டு சதம் (ரூபா 2,53,15,224.72) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பன்ரெண்டு தசம் ஐந்து வீதம் (12.5%) மேலும் ஒரு கோடியே பதினான்கு இலட்சத்து முப்பத்தி ஏழாயிரத்து எழுநூற்று முப்பத்தி நான்கு ரூபா இருபத்தி ஐந்து சதம் (ரூபா 1,14,37,734.25) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதின் மூன்று தசம் ஐந்து வீதம் (13.5%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இலக்கங்கள் 3750, 277, 279, 3499, 589, 4186 மற்றும் 891 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை ( வரைபட இல. 3997 இன் லொட் இல. 01 அதிவிசேட வர்த்தமானி இல.2204/ 26 இன் மூலம் வீ.அ.அ. சபையினால் கையகப்படுத்தப்பட்ட உத்தரவுபெற்ற ஏலதாரர் கே.எஸ். தசநாயக்க என்பவரால் தயாரிக்கப்பட்ட 2022.08.28 ஆந் திகதியிடப்பட்ட இல.6306 ஐ ஏற்ற அண்மையில் தயாரிக்கப்பட்ட நில அளவை வரைபடத்திற்கு அமைவாக லொட் இல.01 இலிருந்து அகற்றப்பட்ட மற்றும் 2023.01.19 இற்கு (வரைப்பட இல. 141/89 இன் லொட் A மற்றும் 11.30 இற்கு (வரைபட இல. 2834A இன் லொட் 05, கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதார்களான பீ. கே. ஈ. சேனாபத்தி என்பவர்கள் மூலமாக மு.ப.11.45 மணி முதல் ந.ப.12.00 மணி வரை அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

**அட்டவணை**

1. வட மேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், வேஉடவில்லி ஹத்பத்துவையின் மெகொட கொரளே குருநாகல் மா நகர சபை எல்லைகளுக்குள் வோட் இல. 11 குருநாகல் பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் கெட்டுவன (கிழக்கு) - இல. 835 கிராம அலுவலர் பிரிவின் முத்தெட்டுகல கிராமத்தில் அமைந்த தம்புள்ளை வீதி வரிமதிப்பீட்டு இல. 210 ஐ ஏற்ற "தங்காஹாமுள வத்த, காஹாட்டகாஹாமுள வத்த, கெதரகாவகும்புரெ பில்லேவ, தங்காஹாமுளஹேன மற்றும் ஊறுபாகட வத்த" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் எச். ஏ. எம். சீ. பண்டார என்பவரால் தயாரிக்கப்பட்ட 2005, மாச்சு 20 ஆந் திகதியிடப்பட்ட இல. 3997 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு: குருநாகல் முதல் தம்புள்ளை வரையாக பிரதான வீதி; கிழக்கு: லொட் A1B எனக் குறிப்பிடப்பட்ட இக் காணியின் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட பகுதி; தெற்கு: லொட் A1C எனக் குறிப்பிடப்பட்ட இக் காணியின் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட பகுதி மற்றும் மேற்கு: கெட்டுவன வரையான பெருந்தெருவை பிரிக்கும் சீமெந்து கான், ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் முப்பது பேர்ச் (00ஏ. 00றூ. 30பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 3997 எனும் வரைபடத்திற்கு அமைவாக குருநாகல் காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் A 1467/ 242 (ஏனைய விபரங்கள் பகுதியில்) இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கூறப்பட்ட லொட் 1 மிகத் திருத்தமாக கீழே விபரிக்கப்பட்ட காணியின் மீள் அளவீடாகும்.

கூறப்பட்ட முத்தெட்டுகல கிராமத்தில் அமைந்த தம்புள்ளை வீதி வரிமதிப்பீட்டு இல. 210 ஐ ஏற்ற "தங்காஹாமுள வத்த, காஹாட்டகாஹாமுள வத்த, கெதரகாவகும்புரெ பில்லேவ, தங்காஹாமுளஹேன மற்றும் ஊறுபாகட வத்த" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவு பெற்ற நில அளவையாளர் எஸ். எம். பெர்ணாண்டோ என்பவரால் தயாரிக்கப்பட்ட 2000, ஓகத்து 23 ஆந் திகதியிடப்பட்ட இல. 3420 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் A1A (28 ஆந் திகதியிடப்பட்ட உப பிரிவிற்கு அமைவாக) எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு: குருநாகல் முதல் துள்ளை வரையான பிரதான வீதி; கிழக்கு: லொட் A1B ; தெற்கு: லொட் A1C மற்றும்; மேற்கு: கெட்டுவன வீதி, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் முப்பது பேர்ச் (00ஏ. 00றூ 30பே.) கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 3420 எனும் வரைபடத்திற்கு அமைவாக குருநாகல் காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் A 1647/ 242 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

(ஈட்டு முறி இல. 277 இன் மீது பிணையாக அடகு வைக்கப்பட்டுள்ளது).

(வரைபட இல.3997 இன் கூறப்பட்ட லொட் 01 உத்தரவுபெற்ற நில அளவையாளர் கே.எஸ். தசநாயக்க என்பவரால் தயாரிக்கப்பட்ட 2022.08.28 ஆந் திகதியிடப்பட்ட அண்மையில் தயாரிக்கப்பட்ட இல. 6306 எனும் வரைபடத்திற்கு அமைவாக லொட் 1-3 என 03 பகுதிகளுக்கு உப பிரிவுகளாக்கப்பட்ட இல. 2204/26 எனும் விசேட வர்த்தமானி அறிவித்தலுக்கிணங்க வீ அ.அ. சபையினால் கையகப்படுத்தப்பட்ட கூறப்பட்ட இல.6306 எனும் வரைபடத்தின் லொட் 01 நீக்கப்பட்டுள்ளது.

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், வேஉடவில்லி ஹத்பத்துவையின் மாஹாகல்பொட மெகொட கோரளே குருநாகல் மா நகர சபை எல்லைகளுக்குள் வோட் இல. 11 குருநாகல் பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் கெட்டுவன (கிழக்கு) - இல. 835 கிராம அலுவலர் பிரிவின் கெட்டுவன கிராமத்தில் கெட்டுவன வீதி வரிமதிப்பீட்டு இல. 84 ஐ ஏற்ற "தங்காஹாமுளவத்த, காஹாட்டகஹாமுள வத்த, கெதரகாவகும்புரே பில்லேவ, தங்காஹாமுளஹேன மற்றும் ஊறுபாகட வத்த" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் கே.எஸ். தசநாயக்க என்பவரால் தயாரிக்கப்பட்ட 2022, ஓகத்து 28 ஆந் திகதியிடப்பட்ட இல. 6306 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 2 மற்றும் 3 எனக்குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன- வடக்கு: கூறப்பட்ட வரைபடத்தின் லொட் 1; கிழக்கு: டபிள்யூ. பீ. விக்ரமாரச்சி (இல.3420 எனும் வரைபடத்தின் லொட் A1B) என்பவரால் உரிமை கோரும் தம்புள்ளை வீதி வரிமதிப்பீட்டு இல. 212 எனும் காணி; தெற்கு: இல.3420- எனும் வரைபடத்தின் லொட் A1C என பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட இக்காணியின் காணித்துண்டு மற்றும் மேற்கு: கெட்டுவன வீதி ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் இருபத்தி ஏழு தசம் ஒன்பது சைபர் பேர்ச் (00ஏ. 00றூ. 27.90பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 6306 எனும் வரைபடத்திற்கு அமைவானதாகும்.

2. வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், கேஉடவில்லி ஹத்பத்துவையின் மாஹாகல்பொட மெகொட கோரளே குருநாகல் மா நகர சபை எல்லைகளுக்குள் வோட் இல. 11 குருநாகல் பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் கெட்டுவன (கிழக்கு) - இல. 835 கிராம அலுவலர் பிரிவின் கெட்டுவன கிராமத்தில் கெட்டுவன வீதி வரிமதிப்பீட்டு இல. 84 ஐ ஏற்ற "கொடகந்தேஹேன தேன் வத்த" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் டப்ளியூ. சீ. எஸ். எம். அபேசேக்கர என்பவரால் தயாரிக்கப்பட்ட 1989, செத்தெம்பர் 24 ஆந் திகதியிடப்பட்ட இல. 141/ 89 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் A எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன- வடக்கு: மொலகொட காணி; கிழக்கு: இல. 141/ 89 எனும் வரைபடத்தின் லொட் B ஆனால் மிகத் திருத்தமாக உத்தரவு பெற்ற நில அளவையாளர் சீ. எஸ். எம். அபேசேக்கர என்பவரால் தயாரிக்கப்பட்ட 2000, பெப்புருவரி 22 ஆந்

திகதியிடப்பட்ட லொட் B இன் உப பிரிவான இவ் வரைபடத்தின் லொட் B1; தெற்கு: 3 ஆவது ஒழுங்கை மற்றும் மேற்கு: கண்டி வீதி முதல் தம்புள்ளை வீதி வரை நீளும் கெட்டுவன வீதி, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் பதின் எட்டு தசம் ஆறு இரண்டு ஐந்து பேர்ச் (00ஏ. 00றூ. 18.625பே.) கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 141/89 எனும் வரைபடத்திற்கு அமைவாக குருநாகல் காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் G 15/131 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

